22nd November 1963]

செய்தார்கள் என்று தெரிந்தால் உடனடியாக அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து அவர்களை வீட்டுக்கே அனுப்பி வைப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எனக்கு அது தெரியாது. புகார் வந்தால் அது பரிசிலனை செய்யப்பட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. து. ப. அழகமுத்து: ஆசிரியர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வேலை செய்தார்கள் என்ற புகார் வந்தால் தான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறதா? அல்லது காங்கிரஸ் கட்சிக்கும் வேலை செய்தார்கள் என்ற புகார் வந்தால் அதன்பேரிலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நியாயமான முறையில் ஆசிரியர்கள் மீது எத்தகைய புகார் வந்தாலும் அது கவனிக்கப்படும்.

திரு. ப. உ. சண்முகம்: பள்ளிக்கூடம் ஆரம்பிக்கும் காலத்தில் ஆசிரியர்கள் மாற்றப்படாமல், இடைக்காலத்தில் ஆசிரியர்களை மிகப் பெருவாரியாக மாற்றுவதற்கு வேறு என்ன காரணம்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: காரணங்கள் எதுவும் இல்லாமல் யாரையும் மாற்றுவது இல்லையென்று முன்பும் சொன்னேன்.

Tanks (Ramanathapuram)

* 446 *Q.*—SRI C. SRINIVASAN : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any scheme to improve the storing capacity of the big tank in Ramanathapuram?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

உரத் தொழிற்சாலை

*** 447 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை அருகே உரத் தொழிற்சாலை ஒன்று நிறுவ உரத் தொழில் கார்ப்பரேஷன் சர்க்காரை அனுமதி கோரியதா?

(இ) ஆமென்றால், சர்க்கார் அளித்த பதில் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) : The Fertilizer Corporation of India requested this Government to suggest suitable sites near Madras for locating a fertilizer factory. Accordingly two sites have been suggested and the decision of the Corporation is awaited.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS